செய்தி வெளியீடு எண்:493 நாள்:20.10.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (20.10.2016) சென்னை வட்டத்திற்குட்பட்ட பொதுப்பணி நீர்வள ஆதாரத்துறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின்போது பொதுப்பணித்துறையின் முதன்மைச் செயலர் திரு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப. மற்றும் பொதுப்பணித்துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர்கள், நீர்வள ஆதாரத்துறை பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வடகிழக்கு பருவமழை ஒரு சில நாட்களில் துவங்க உள்ள நிலையில், பொதுப்பணித் துறையின் சென்னை மண்டலத்தில் நடைபெற்று வரும் திட்ட பணிகள் மற்றும் வெள்ளத் தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகளின் முன்னேற்றம் குறித்தும், முக்கியமாக சென்னை மாநகர் மற்றும் புறநகர்பகுதிகளில் கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு, பள்ளிக்கரனை சதுப்பு நிலம் மற்றும் பக்கிம்காம் கால்வாய் ஆகிய நீர்வழித்தடங்களில் கடந்த ஆண்டு வெள்ளத்தினால் ஏற்பட்ட உடைப்புகள் சரிசெய்யப்பட்டது குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூார் மாவட்டங்களில் அண்மையில் ரூ. 10 கோடி செலவில் வெள்ள தடுப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் ரூ.3.62 கோடி மதிப்பீட்டில் சென்னை மாவட்டத்தில் 21 பணிகள், திருவள்ளூர் மாவட்டத்தில் 18 பணிகள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 10 பணிகள் ஆகியவற்றின் செயலாக்கம் குறித்து ஆய்வு செய்தார். மேலும் ரூ. 6.38 கோடி மதிப்பீட்டில், காஞ்சிபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களில் ஓடும் அடையாறு நீர் வழித்தடத்தில் உள்ள தடைகள் மற்றும் மண்திட்டுகளை அகற்றி வெள்ளநீர் விரைவாக வழிந்தோடும் வகையில்

52 சீரமைப்பு பணிகள் நடைபெறுவதை குறித்தும் ஆய்வு செய்து மீதமுள்ள பணிகளை அக்டோபர் மாத இறுதிக்குள் முடிக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறித்தினார்.

கடலூர் மாவட்டத்தில் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் வெள்ளம் விரைவாக வழிந்தோடும் வகையில் கீழ்பரவனாறு – மத்திய பரவனாறு இணைப்பு கால்வாய் புதிதாக அமைக்கும் பணிகள் குறித்தும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் மூலமாக கடலூர் மாவட்டம் செங்கால் ஓடையின் நீளத்தை அகலப்படுத்தி தூர்வாரி கரைகள் சீரமைக்கும் பணிகள் குறித்து கேட்டறிந்து பணிகள் விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார்.

மேலும், சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் திட்டங்களில் புதிதாக அமைக்கப்படும் தேர்வாய் கண்டிகை கண்ணன்கோட்டை நீர்த்தேக்க திட்டப்பணிகளில் முன்னேற்றம் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது.

மேற்கூறிய பணிகள் அனைத்தையும் விரைவாக முடித்திட அதிகாரிகளை அறிவுறுத்தினார். மேலும், வெள்ள காலங்களில் விழிப்புணர்வுடன் துரிதமாக செயல்பட அறிவுரை வழங்கினார்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**